*1973 நவம்பர் 20]*

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** டிரையினில் வழங்கப்படும் கன்செஷன் போன்ற கன்செஷன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிப்பது பள்ளிகளுக்குப் போவதற்கே தவிர, வீட்டிற்குப் போவதற்கு அல்ல.

### விரைவுப் பேருந்துகளில் பழுது பார்க்கும் கருவிகள்

*** 244 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*அரசு விரைவுப் பேருந்துகள் எதிர்பாராத விதத்தில் பஞ்சர் போன்ற சிறு ரிப்பேர் ஏற்படும் காலத்தில் உடன் சீர்செய்யத் தேவைப்படும் தளவாடங்கள் (tools bit) கொடுக்கப் பட்டுள்ளதா ?*

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, பல நேரங்களில் சிறு ரிப்பேர் இருந்தால் கூட, டயர் அல்லது ட்யூப் பஞ்சர் ஆனால் கூட அதை மாற்றுவதற்கு அல்லது சரி செய்வதற்குத் தேவையான உபகரணங்கள், டூல்ஸ் வண்டிகளில் இருப்பதில்லை. அந்த நிலைமையை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எதிர்பாராமல் ஏற்படுகின்ற பிரேக் டவுன்களை சரிபார்ப்பதற்குத் தேவையான கருவிகள் பொதுவாக விரைவுப் பேருந்துகளில் கட்டாயம் வைக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எங்கேனும் அப்படியில்லை என்றால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஒரு பஸ் வாங்கும்போது ஒரு டூல் கிட் வண்டியை விற்பவர்கள் கொடுக்கிறார்கள். அந்த

டூல் கிட்கள் ஒழுங்காக பஸ்களுக்கு வந்து சேருகின்றனவா என்று ஒரு ஆராய்ச்சி நடத்தி, அப்படியில்லை என்றால் அந்த டூல் கிட்கள் எங்கே போகின்றன என்பது பற்றி விசாரணை நடத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படி ஒரு ஆராய்ச்சி நடத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் அந்த டூல் கிட்கள் எவ்வளவு நாட்களுக்கு வருகின்றன என்பது தான் பிரச்னை.

**திரு. சி ஆறுமுகம்:** அரசுப் பேருந்துகள் வழியில் பழுதடைந்தால் சிறிய சிறிய ரிப்பேர்களைச் சரி செய்வதற்கு கூட ஒரு நாள் ஆகிவிடுகிறது. தனியார் துறை பேருந்துகளில் அவ்வப்பொழுது அவர்கள் சரி செய்து கொண்டு விடுகிறார்கள். அந்த மாதிரி அரசாங்கப் பேருந்துகளிலும் வசதி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அது அந்தக் காலம்.

**திரு எம். சுரேந்திரன்:** சிறு ரிப்பேர்களை அவர்களே சரி செய்து கொள்வது என்பது சாதாரணமாக நடைபெறுவதில்லை. ரிப்பேர் ஏற்பட்டவுடன் வண்டியை நிறுத்திவிட்டு, மற்றவர்களுக்குத் தகவல் கொடுத்து, வேறு வண்டி வருவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கிற நடைமுறை. சென்ற சனிக்கிழமையன்று கூட கோவையிலிருந்து சென்னை வருகின்ற வண்டியில் டீசல் இல்லாமல் வண்டி நின்று போய் விட்டது. வேறு வண்டியில் பிரயாணிகளை ஏற்றி அனுப்ப வேண்டியிருந்தது. இம்மாதிரி சிறு தவறுகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள அதிக அக்கறை எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கட்டாயம் இதில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். இதுபோன்ற தவறுகள் ஏற்படாவண்ணம் வண்டியை எடுப்பதற்கு முன்னால் சரி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே டிரைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது தற்காலிகமாக ஒரு வேளை டீசல் பம்பு கட் ஆகி டீசல் இல்லாமல் போய் இருந்தாலும் இருக்கலாம். இதுபோன்ற குறைகளை நிச்சயம் தவிர்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

1973 நவம்பர் 20]

**திரு. எஸ். வடிவேல்:** அரசு பஸ்கள் பழுது அடைகின்ற பொழுது, அதற்குப் பதிலாக வேறு வண்டி விடுவதற்கு முன் வருமா? வண்டிகளைப் பழுது பார்ப்பதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது. அதனால் பிரயாணிகள் பல்வேறு இடங்களுக்குப் போய்ச் சேருவதற்குத் தடையாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படி பழுதடைந்து விட்டால், தற்காலிகமாக நாம் சரி செய்து கொள்ளும் பழுது களாகவும் இருக்கின்றன. உடனடியாக அந்தப் பழுதுகளைச் சரிசெய்ய முடியாத பழுதுகளும் இருக்கின்றன. தற்காலிகமாக சரி செய்து கொள்ளக்கூடிய பழுதுகளை ஆங்காங்கு அவர்களே சரி செய்து பஸ்களை விடுவது தான் நல்ல.

[முற்பகல் 10-00]

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இப்படி ஏற்படுகின்ற சிறு சிறு பழுதுகளைச் சரிப்படுத்துவதற்கு டிரைவர்களுக்கு குறைந்த அளவுக்காவது மெக்கானிசம் பயிற்சி அளிப்பது நல்லது. ஆகவே, டிரைவர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி அளித்து, சிறு பழுதுகளை அவர்களே சரி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவித்துள்ள யோசனையின் பேரில்தான் ஓட்டு நர்களுக்கு ஓரளவு பழுதுபார்க்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டு மென்ற அடிப்படையில் இப்போது புதிதாக ஓட்டுநர் வேலைக்கு ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற 500 பேர்களை நியமிக்க திட்டமிட்டிருக் கிறோம்.

இருந்தபோதிலும் உறுப்பினர்கள் கூறியதுபோல விரைவு பேருந்துகள் ஆங்காங்கே நின்றுவிடுகின்றன என்பது அவ்வளவு சரியானது அல்ல. நான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடன் விரைவு பேருந்துப் போக்குவரத்தை சீரமைக்க வேண்டும் மென்று முடிவு செய்தேன். அப்போது வாரத்திற்கு 4 லட்சம் ரூபாய் வந்து கொண்டிருந்தது. இப்போது வாரத்திற்கு 11 லட்சம் ரூபாய் வந்து கொண்டிருக்கிறது. நானே இந்த இலாகா வுக்கு வைத்த குறியீடு 10 லட்சம் ரூபாய்தான். அந்த அளவுக்கு இப்போது சீரமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1973 நவம்பர் 20

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கேள்வி நேரத்தை அவையின் அனுமதியுடன் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

*Special buses for women in Madurai.*

* 245 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether separate buses are provided for women passengers in the Madurai City; and

(b) if so, the details of the same ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகரில், காலையிலும் மாலையிலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் மகளிருக்காக வென்றே இரண்டு பேருந்துகளை—வழித்தட எண் 1—மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து வருமான வரி அலுவலகம் வரையிலும்—வழித்தட எண் 14—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து திருநகர் வரையிலும் நடத்தி வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்தமாதிரி பெண்களுக்கென்று தனியாக பஸ்கள் விடுவது சௌகரியமாக இருப்பதால், சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் இம்மாதிரி நெரிசல் நேரத்தில் தனி பஸ்கள் விடுவதற்கு சர்க்கார் பரிசீலனை செய்யுமா? தனி பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே தனி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. கோவை நகரைப் பொறுத்த வரையில் அந்த வசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இப்படி மகளிருக்கென்று தனியாக விடப்படுகின்ற பஸ்களில் மகளிர் கண்டக்டர்களே நியமிக்கப்படுவார்களா? எல்லா நகரங்களிலும் மகளிருக் கென்று தனி பஸ்கள் விடப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நெரிசல் நேரங்களில் மட்டும் மகளிருக் கென்று தனி பேருந்துகள் விடுப்படுகின்ற காரணத்தால், மகளிர் கண்டக்டர்களை நியமிப்பது என்பது